**சுருக்கம்**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர் புனரமைப்புத்திட்டம் – மதுரை மாநகராட்சி – விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்த மற்றும் தற்போதுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தினை சீரமைத்து கழிவுநீர் உந்து நிலையத்தை புனரமைக்கவும் ரூ. 229.34 கோடி செலவில் நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை (3டி) எண் 26 நாள்: 24/10/2007

படிக்க:

நகராட்சி நிர்வாக ஆணையாளரின் கடிதம் ந.க.எண்.19359/2007/எம்சிஏ–4 நாள் :5.9.2007.

******

<u>ஆணை:</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரவு செலவு கூட்டத்தொடரில் தமிழகத்தில் உள்ள அனைத்து நகரங்களுக்கும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற கொள்கை அளவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மதுரை மாநகராட்சிக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.229.34 கோடி மதிப்பில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை அமுல்படுத்தவும் தற்போதுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தினை சீரமைத்து கழிவுநீர் உந்து நிலையத்தை புனரமைக்கவும் நிர்வாக ஒப்புதல் வழங்க கோரி மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசினைக் கோரியுள்ளார்.

2. மதுரை மாநகராட்சி மாமன்றம் தனது 18.7.2007 நாளிட்ட தீர்மான எண்.39ல்ஜவஹர்லால் நேரு தேசிய நகர் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்டத்தை அமுல்படுத்தலாம் என்றும் இத்திட்டத்திற்கு தேவைப்படும் 30% பங்களிப்புத் தொகையை தமிழ்நாடு நகர்ப்புற நிதி உள்கட்டமைப்பு நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெற்று அமுல்படுத்தலாம் என்றும், தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதற்கு மாநில கண்காணிப்பு அமைப்பு (State Level Nodal Agency) மற்றும் மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு ஆகியவை ஒப்புதல் வழங்கி உள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேலும் மத்திய அரசு நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழு இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி உள்ளது.

3 இத்திட்டத்திற்கு நிதி பங்கீடு, இயக்கம் மற்றும் பராமரிப்பு கட்டணவீதம் ஆகியவை கீழ்கண்ட அட்டவணை 1, 2,(மற்றும்) 3 –ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை–1
நிதி பங்கீடு

| எண் | திட்டத்தின் பெயர் | நிதிப்பங்கீடு (கோடியில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | மத்திய அரசு | மாநில அரசு | மதுரை மாநகராட்சி | மொத்தம் |
| 1 | பாதாள சாக்கடை இல்லாத பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைத்தல், பழைய பாதாள சாக்கடை புதுப்பித்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு செய்தல் | 114.67 (50%) | 45.87 (20%) | 68.80 (30%) | 229.34 |

அட்டவணை – 2
இயக்கம் மற்றும் பராமரிப்பு

| வரிசை எண் | செலவின விளக்கம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பணியமைப்பு செலவினம் | 108.78 |
| 2. | பழுதுநீக்குதல் மற்றும் மாறுதல் செய்தல் | 55.73 |
| 3. | இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 624.00 |
| | மொத்தம் | 788.51 |

அட்டவணை – 3

| வரிசை எண் | வரிவிதிப்பின் தன்மை | சராசரி வைப்புத்தொகை ரூபாயில் | சராசரி கட்டண வீதம் ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | 2500–5000 | 125 |
| 2 | வீட்டு உபயோகம் அல்லாதது (வர்த்தகம்) | 15,000–1,00,000 | 250 |
| 3 | நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் | " | 375 |

4. மத்திய அரசு நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழு ஆகியவற்றின் ஒப்புதலின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரைத்துள்ள இக்கருத்துருவினை, அரசு கவனமுடன் பரிசீலனை

செய்து, மதுரை மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தை 788.51 இலட்ச ரூபாய் (ரூபாய் எழுநூற்றி எண்பத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தி ஓராயிரம் ) ஆண்டு பராமரிப்பு செலவில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.229.34 கோடி(ரூபாய் இருநூற்றி இருபத்தி ஒன்பது கோடியே முப்பத்தி நான்கு இலட்சம்) மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை மதுரை மாநகராட்சி மூலம் செயல்படுத்தவும், தற்போதுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தினை சீரமைத்து கழிவுநீர் உந்து நிலையத்தை புனரமைக்கவும், மேலே பத்தி 3ல் உள்ள அட்டவணை 1,2மற்றும்3–ல் குறிப்பிட்டுள்ள நிதிபங்கீடு, பராமரிப்புத்தொகை, கட்டணவீதம் ஆகியவற்றின் அடிப்படையில், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளித்து அரசு இவண் ஆணையிடுகிறது.

- மதுரை மாநகராட்சி மாமன்றம் மாநகராட்சியின் பங்குத் தொகையை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் பெறலாம் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. நிர்வாக ஒப்புதல் அளித்தபின்பு மதிப்பீட்டுத் தொகையின் 30% தொகையை நிர்ணயம் செய்து அத்தொகைக்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (*TUFIDCO*) மூலம் கடன் பெறுவதற்கு உரிய மாமன்ற தீர்மானங்கள் இயற்றப்படவேண்டும்.

- இத்திட்டத்திற்கான தொழில்நுட்ப ஒப்புதல் பெறும்போது திட்ட மதிப்பீட்டுத் தொகை இயக்கம் மற்றும் பராமரிப்பு கட்டணத்தில் கூடுதல் செலவீனம் ஏற்படும் பட்சத்தில் கடன் வழங்கும் நிறுவனம் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

- இவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட திட்டத்திற்கான கடன் மானிய தொகையினை இறுதியாக்கம் செய்யும் போது கட்டணவிகிதம் மற்றும் வைப்புத்தொகை தொடர்பான வகைப்பாடு ஏற்பது குறித்தும் மாநகராட்சி மற்றும் கடன் வழங்கும் நிறுவனமும் முடிவெடுக்க வேண்டும்.

- திட்டத்தில் மாறுதல்கள் ஏதேனும் இருப்பின் அதற்குரிய மாற்று தீர்மானங்கள் மாநகராட்சி மாமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு அதனை நகராட்சி நிர்வாக ஆணையர் மாநில அளவிலான திட்ட ஒப்பளிப்புக்குழுவின் முன் வைத்து அனுமதியினைப் பெறவேண்டும்.

- செயலாக்கம் மற்றும் பராமரிப்பு ஆண்டு செலவினம் மற்றும் கட்டுமான காலத்தில் ஏற்படும் வட்டி உயர்வு, ஏனைய விலைவாசி உயர்வு ஆகியவற்றால் ஏற்படும் பற்றாக்குறையினை அந்த மாநகராட்சியே அதன் பொது நிதியிலிருந்து ஈடு செய்ய ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்:3299/FS/P/07 நாள் 15.10.2007ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை.
உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர்,சென்னை-108
மாநிலக் கணக்காயர், சென்னை-5
மாநிலக் கணக்காயர், சென்னை-18
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-9
நகல்
முதுநிலை நேர்முக உதவியாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (நிதி) அலுவலகம், சென்னை-9
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (ஊவ (ம) உது) அலுவலகம், சென்னை-9.
நேர்முக உதவியாளர், செயலர் (நிதி), சென்னை-9
நேர்முக உதவியாளர், செயலர் (ந.நி (ம) கு.வ )துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்(அநமு2) துறை, சென்னை-9
இருப்புக்கோப்பு/உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர் 25/10/07